பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 21 சனிக்கிழமை 06.08.2022 கதிர் 274

### இனி இது ரகசியம் அல்ல!

சபாஷ், சரியான போட்டி!

தென்னிலங்கை 'அறகல்ய' காரர்களுக்கு (போராட்டக் காரர்களுக்கு) வடக்கிலிருந்து நீண்டிருக்கும் ஆதரவுக்கரத்தைத்தான் சொல்லுகிறேன். ஆதரவு தருவதிலும் நம் மத்தியில் போட்டி.

வடக்கு மக்கள் அந்தப் 2

## சர்வகட்சி அரசு என்ற சொற்பதத்துக்கு சர்வகட்சி ஆட்சி என்று பெயரிடுங்கள்!

### சஜித் அணியுடனான சந்திப்பில் ரணில் முன்மொழிவு



எதிர்காலத்தில் ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரசை சர்வகட்சி அரசு என்று பெயரிடுவதற்கு உடன்படவில்லை என்றால், சர்வகட்சி ஆட்சி என்று பெயரிட நான் முன்மொழிகின்றேன்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வகட்சி அரசை அமைப்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே 2

## இன்றும் நாளையும் மின்வெட்டு இல்லை

இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாளாந்தம் சுமார் 3 மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில் 06

# பொருளாதாரப் போராட்டத்திலும் நாங்கள் வெற்றி பெற வேண்டும்


## 'கோல்பேஸ்' ஆர்ப்பாட்டக்காரர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் இளைஞர்களுடன் இணைந்து வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட நான் தயார். நாம் இப்போது பொருளாதாரப் போராட்டத்தில் வெற்றி பெற வேண்டும். அந்தப் பொருளாதாரப் போராட்டத்தின் வெற்றிக்குப் போராட்டக் களத்தில் உள்ள அனைத்து இளைஞர், யுவதிகளையும் சகல வழிகளிலும் பங்கேற்கச் செய்ய நான் எதிர்பார்த்துள்ளேன்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 2

## அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமையை வலியுறுத்துகிறது அமெ.



அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமையை அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சருடன சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 06

## கடல் வழியே நுழைய முயன்ற 46 பேரை மடக்கி கடல் வழியே கூட்டி வந்து ஒப்படைத்தது ஆஸி!



ஆஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு படையினர் ஆஸ்திரேலிய எல்லைப் படைக் கப்பலில் இலங்கையை சேர்ந்த 46 சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 06 ஆம் திகதி மட்டக்களப்பு வாழைச்சேனையிலிருந்து ஆழ்கடல் மீன்பிடி 06

## ஞானசாரர் தலைமையிலான செயலணியை குப்பைக்கூடைக்குள் தூக்கிக் கடாசுங்கள்!

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்து

பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான 'ஒரே நாடு;ஒரே சட்டம்' தொடர்பான செயலணி அறிக்கையை குப்பைக் கூடையில் போடுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் 06

## பொருளாதார நெருக்கடியைத் திசை திருப்ப போராட்டக்காரர்கள் மீது கடும் நடவடிக்கை!

### ஆட்சேபிக்கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

அமைதிப் போராட்டக்காரர்கள் மீது இலங்கை அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறையானது, தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டியதன் 06

HUMAN RIGHTS WATCH

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ரணில் அரசை முற்றாக எதிர்க்கும்



### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டவட்டமாக நேற்று அறிவிப்பு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 06

தாங்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராகச் செயல்படுவதற்கு முடிவெடுத்து இருக்கின்றார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று அறிவித்தார். 06

## அமைச்சுப் பதவியைப் பெறும் வெறி தமக்கு இல்லை என்கின்றார் விக்கி!

அமைச்சுப் பதவிகளைப்பெற்றுக்கொள்ளும் வெறி தமக்கு இல்லை எனவும், வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கத்தான் விரும்புகிறார் எனவும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் 06

## வடக்கில் பாடசாலைகள் வரும் வாரம் 5 நாள்களும்

வடக்கு மாகாணத்தில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளை அடுத்த வாரம் 5 நாள்களும் (திங்கள் முதல் வெள்ளி வரையும்) நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதேவேளை மத்திய கல்வி அமைச்சு முன்னைய வாரங்கள் போன்று வரும் வாரமும் 06

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டக்காரர்களுக்கு பரிந்து கிளர்ந்திருக்கின்றனரோ, இல்லையோ நம் தமிழ்த் தேசியத்தின் தலைவர்கள் சிலர் அவர்களுக்கு ஆதரவாக வரிந்து கட்டிக் கொண்டு வீறு கொண்டு எழுந்திருக்கிறார்கள்.

இதில்விசேஷம்என்னவென்றால்வழக்கமாக எதிரும் புதிருமாகப் போட்டா போட்டி போடும் சுமந்திரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினரும் 'அறகல்ய'காரர்களுக்கு சேர்ந்து சப்போர்ட் பண்ணுவதில் போட்டி போடத் தலைப்பட்டிருக்கின்றமைதான். இதுவரை 'அறகல்ய'காரர்களுக்காகச் சீறுவதில் சுமந்திரன் – சாணக்கியன் அணிதான் முன்நின்றது. வழமை போல சுமந்திரனுக்குப் போட்டியாக இதில் கிளம்பி விட்டார் கஜேந்திரகுமார். அவரின் அந்தச் சீற்றம் நேற்று வெளிப்பட்டது.

மேற்படி 'அறகல்ய' போராட்டக் காரர்களின் தீவிர நடவடிக்கைகளினால் மே, ஜுன், ஜுலை 9 ஆம் திகதிகளில் நடந்த அதிரடி அரசியல் திருப்பங்கள் தெரிந்தவைதான். அடுத்த அத்தியாயம் வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடக்குமென சில வட்டாரங்கள் கதை விடுகின்றன.

சுனாமி அடிக்கும் என்கின்றார் முன்னாள் இராணுவத் தளபதியும், சஜித் அணி எம்.பியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. சுனாமி அடிப்பதற்கு உதவ சுமந்திரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும்தான் நேரில் போக வேண்டும் போல.

அங்கு கொழும்பில் அதற்கு ஆள்கள் சேருவார்கள் போல தெரியவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டால்தான் உண்டு.

இப்போதைய 'அறகல்ய' போராட்டம் ஜே.வி.பி. மற்றும் குமார் குணரத்தினத்தின் புதிய சோசலிஸ்ட் அணியினுடையது என்ற கருத்து நிலைப்பாடே தென்னிலங்கை மக்கள் மனதில் இப்போது ஓடுகின்றது.

புதிதாக ஜனாதிபதிப் பதவி ஏற்றிருக்கும் ரணிலுக்குக் கொஞ்சம் காலமாவது கொடுத்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணமும் தெற்கில் உண்டு.

போதாக் குறைக்கு நாட்டில் மின்வெட்டு கணிசமான அளவு குறைந்துவிட்டது. நீரேந்தும் பகுதிகளில் வெள்ளம் போடும் அளவுக்கு தாராளமாக மழை பெய்து வருவதால் மின்வெட்டு இல்லாமல் போகும் சாத்தியமும் உள்ளது. எரிவாயு வரிசை அடங்கிவிட்டது. விலைகளும் குறையும் சாத்தியமும் உள்ளது. எரிபொருள் விநியோகம் தலைநகரில் சீரடையும் கட்டம். வெளியிடங்களிலும் கணிசமான முன்னேற்றம் உண்டு.

இந்தச் சூழலில் 9ஆம் திகதி போராட்டம் சூடு பிடிக்கும் சாத்தியம் அதிகம் தெரியவில்லை.

காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம' கொட்டகைகள் ஒவ்வொன்றாக அவிழ்க்கப்படுகின்றன; பிரிக்கப்படுகின்றன. அங்கு அமைக்கப்பட்ட நூலகம் நேற்று அகற்றப்பட்டது. பத்தாம் திகதி புதன்கிழமை வரை அங்கு 'பாய்ச்சல்' எதுவும் நடத்தப்பட மாட்டாது என சட்டமா அதிபர் தரப்பில் நீதிமன்றத்தில் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. 9ஆம் திகதி போராட்டத்துடன் எல்லாம் அடங்கிவிடும் சூழலே தென்படுகின்றது.

எனினும் வடக்கு மக்கள் மத்தியிலும் 'அறகல்ய' போராட்டக்காரர்கள் குறித்து சூடு கிளப்பும் சுமந்திரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மறக்காமல் 9ஆம் திகதி போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் – அவர்களை உசுப்பேத்தி விட்டு ஒதுங்காமல்...!

– மின்னல் –

---

## பொருளாதாரப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினருக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக விரோத அரசியலையும் வன்முறையையும்நான்எதிர்க்கின்றேன். ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்படுபவர்கள், பல்கலைக்கழக செயற்பாட்டின் ஊடாக பகிடிவதையை நிறுத்தி சிறந்த சமூக ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பவும் முன்வர வேண்டும்.

இன்று நமது பல்கலைக்கழகக் கட்டமைப்பு சீர்குலைந்து இருப்பதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று பகிடிவதை ஆகும்.

வேலைநிறுத்தங்கள் எல்லாக் காலத்திலும் தொடர்ந்தன. வேலைநிறுத்தங்கள் மூலம் ஒரு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. பேச்சு மூலம் மத்தியஸ்த நிலைக்கு வந்து கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்வதைப் போன்று, நாட்டுக்காகச் செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

அனைத்து ஆர்ப்பாட்டக்காரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான குழுவொன்றை உருவாக்க வேண்டும். அக்குழுவில் அனைத்து மதங்களின் பிரதிநிதித்துவம் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியமானது.

இளைஞர்களின் தேவைகளுக்காக அரச அனுசரணையுடன் செயற்படுத்துவதற்குக் கொழும்பு கோட்டை மிதக்கும் சந்தை மற்றும் பல்வேறு இடங்களை முன்மொழிய நான் விரும்புகின்றேன். அது தொடர்பில் முறையான ஆலோசனைகளைப் பெரும்பான்மையான ஆர்ப்பாட்டக்காரர்களின் பங்களிப்புடன் தயாரித்துக் கையளியுங்கள்.

அந்தச் செயற்பாட்டில், கல்விக்கான நூலகங்கள், அரசியல் கல்விக்கான வசதிகள், இசை, கலை, நாடகம் போன்ற இளைஞர்களின் திறன்கள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மத்திய நிலையமாக அது உருவாக்கப்பட வேண்டும்.

அவசரகால நிலையை முடிந்தவரை விரைவில் நீக்குவது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மைக்கு முக்கியமாக இருப்பதைப் போன்று, தற்போதுள்ள நிலைமைகள் காரணமாக நாட்டின் நிர்வாகத்திலும் அதன் தாக்கம் இருக்கின்றது.

தற்போது ஸிறூயவீ சமூகம் தொடர்பில் அவசரகாலச் சட்டம் காரணமாக பிரச்சினைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளது என எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை நீக்குவதற்குத் தேவையான சட்டப் பின்னணியை தயார் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளேன்.

மேலும், பொதுமக்கள் சபைகளை ஸ்தாபிப்பது தொடர்பில் ஏற்கனவே பல தரப்பினரிடமிருந்து முன்மொழிவுகள் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரம் குறித்த வேலைத்திட்டம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளேன் – என்றார்.

ஆர்ப்பாட்டக்காரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைதியான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களைச் சட்ட விரோதமாகவோ அல்லது தன்னிச்சையாகவோ கைதுசெய்வதைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

தற்போது எந்தத் தவறும் செய்யாது தளத்தில் இருக்கின்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் கைதுசெய்யப்படுவதால் அங்கிருந்து வெளியே செல்லப் பயப்படுகின்றனர்.

இப்போராட்டத்தின் மிகவும் கடினமான பகுதி தற்போது ஆரம்பமாகியுள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் சிந்தனைகளிலும் புரட்சி ஏற்பட வேண்டும்.

இளம் தலைமுறையினர் எல்லையற்ற அர்ப்பணிப்புடன் நாட்டுக்குப் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தவே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அரசமைப்பு ரீதியில் சாதகமான பலனைப் பெறுவதே எமது எதிர்பார்ப்பு.

கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தங்கள் உட்பட நாட்டை முறையான மற்றும் ஸ்திரமான நிலைக்குக் கொண்டுவர விரைவான சீர்திருத்தச் செயல்முறையை நிறுவ வேண்டும் எனப் பரிந்துரைக்கின்றோம்.

நாட்டின் முன்னேற்றத்தை விரும்புவோரின் ஆர்ப்பாட்டத்தின் முன்னேற்றம், கலந்துரையாடல் மற்றும் பேச்சு மூலம் செய்துகொள்ளப்படுகின்ற இணக்கப்பாடுகளில் அடங்கியுள்ளது. அதற்காக ஜனநாயக நடவடிக்கைகள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியிலும் மேற்கொள்ளப்படும் என நம்புகின்றோம்.

போராட்டத்தின் மூலம் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பல பெரிய வெற்றிகளை இளைஞர்கள் பெற்றுத் தந்தது எங்களின் தலைமுறையின் தனிச்சிறப்பு.

உலகம் முழுவதும் ஜனநாயகத்தைப் போற்றும் மக்களால் இந்தப் போராட்டம் மதிக்கப்படுகின்றது. அதன் காரணமாகவே நமது நாடு உலகின் கவனத்தைப் பெற்றது – என்றனர்.

---

## சர்வகட்சி அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது: –

சர்வகட்சி அரசில் இணையுமாறு அனைத்துக் கட்சிகளையும் நாங்கள் அழைத்துள்ளோம். அதற்காக அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். நாட்டின் பொருளாதாரம் தற்போது இக்கட்டான நிலையில் உள்ளது. இந்த நிலையில் இருந்து மீள அனைவரும் இணைந்து அரசின் அமைச்சுப் பதவிகளை ஏற்று சர்வகட்சி அரசை உருவாக்கி இந்த நாட்டைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஐக்கிய மக்கள் சக்திக்கு சர்வகட்சி அரசில் எங்களுடன் இணைந்து பணியாற்ற வருமாறு அழைக்கின்றேன். இவர்கள் அனைவரும் என்னுடன் பணியாற்றியவர்கள். எந்தப் பிரச்சினையும் இல்லை. நாம் ஒன்றாக வேலை செய்ய முடியும்.

1941ஆம் ஆண்டு, பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியானது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்துக் கொண்டு அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டது. முழு நாடாளுமன்றமும் அரசாக ஆக்கப்பட்டது. அதே மரபை நாமும் செயற்படுத்தலாம்.

1977 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தில் 5/6 அதிகாரம் பெற்று அரசு அமைக்கப்பட்டு நாடு கட்டியெழுப்பப்பட்டது. ஆனால், இப்போது 5/6 அதிகாரத்தாலும் சர்வகட்சி அரசு இல்லாமல் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ஒரே வழி சர்வகட்சி ஆட்சி மாத்திரமே ஆகும்.

சமீபத்திய வன்முறைச் செயல்கள் காரணமாக, நாங்கள் அவசரகால உத்தரவை விதிக்க வேண்டியிருந்தது. ஆனால், அவசரகால உத்தரவைத் தொடர்வதற்கு நான் எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், எதிர்கால பொருளாதார வேலைத் திட்டத்தின்போது சில சட்டங்கள் விதிக்கப்பட வேண்டும். அதற்கு அவசரகாலச் சட்டம் தேவை – என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியதாவது:–

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லுமாறு நாங்கள் பரிந்துரைக்க விரும்புகின்றோம். அன்று நாட்டின் பிரதமராக நீங்கள் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டுவர தலைமைத்துவம் வழங்கினீர்கள். அது மிகவும் நல்ல ஒரு நகர்வு ஆகும். எனவே, இதனை மேலும் முன்னெடுத்துச் செல்லுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் 19 ஆவது திருத்தத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அரசமைப்பு சபைகளின் எண்ணிக்கை 20 ஆவது திருத்தத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்தபடியே அதனைக் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானது என்பதை நினைவுகூர விரும்புகின்றேன்.

இன்று நாட்டில் நிலவும் மிகப் பெரிய பிரச்சினை, மக்கள் மீது பெரும் பொருளாதாரச் சுமை சுமத்தப்பட்டுள்ளமை ஆகும். இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண் பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், தற்போதுள்ள அவசரகால சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நாடாளுமன்றத்தில் துறைசார் குழுக்களை அமைத்தால் மட்டும் போதாது. இது தவிர மேலும் பல குழுக்களை அமைப்பதில் கவனம் செலுத்த பரிந்துரைக்கின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தி நேர்மறை எண்ணங்களுடன் இன்று இந்தக் கலந்துரையாடலுக்கு வந்துள்ளது. இந்த நேரத்தில், ஒரு நாடாக, நாம் இந்த கலந்துரையாடலில் கலந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் தற்போது அசாதாரணமான அரசியல் சூழ்நிலை உள்ளதென்றே கூற வேண்டும். அதனை முழுமையாகப் புரிந்துகொண்டு இந்தக் கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்ல நான் தயாராக உள்ளேன் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கூறியதாவது:–

வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகின்ற போதிலும், அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு இந்தச் சட்டத்தை பிரயோகிக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கின்றேன். அண்மையில் நீங்கள் நாடாளுமன்றத்தில் முன்வைத்த கொள்கைப் பிரகடனம் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். எங்கள் குழுவின் வேலைத்திட்டமும் அதற்கு இணையானது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன் – என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கூறியதாவது:–

ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதே போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து மக்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. அதில் நாம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்புவது எம் அனைவரினதும் பொறுப்பு ஆகும்.

சர்வகட்சி அரசை உருவாக்குவது பயனுள்ளதாக இல்லை. தற்போதுள்ள பிரச்சினைக்கு அதை தீர்வாக நான் பார்க்கவில்லை. தற்போது நாடும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காண வேண்டியதே அவசியமாகும் – என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், கபீர் ஹசீம், கலாநிதி ஹர் டி சில்வா ஆகியோரும் இதன்போது கருத்துத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# பன்னிரெண்டாம் ஆண்டில் நினைவஞ்சலி



## சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

**திதி : 2022.08.05**

தோற்றம் : 23 . 12 . 1923

மறைவு : 16 . 08 . 2010

'SVM' மூன்றெழுத்தால்
எவ்வுலகிலும் அறியப்பெற்ற ஏந்தலே!
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும்
ஐயா! உங்கள் நினைவிலேயே நாமின்றும்!

தமிழினத்தின் அடையாளமாய்
காரைநகரின் நிமிர்வாய்
வர்த்தக உலகில் வைரமாய்
அற உலகில் ஆணி வேராய்
ஆன்மீக உலகின் காவலனாய்
உழைப்பில் ஓங்கிய வடிவமாய்
யாழ்ப்பாணத்தின் பொருளாதார அடையாளமாய்
விளங்கியதே SVM முன்றெழுத்தே!

வழமோங்க வாழ வழிசெய்த
வள்ளலே உங்கள் வழி நிற்கின்றோம்!

குடும்பத்தினர்.

**உரிமையாளரும் பணியாளர்களும்**

**S.V.M (PVT) LTD**
122, Damstreet, Colombo-12.

**S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD**
160, Standely Road, Jaffna.

**SVMURUGESU**
154, Hospital Road, Jaffna.

**SVM FUEL MART**
173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.

**SVMURUGESU ( PVT) LTD**
106, Hospital Road, Jaffna.

**S.V.M. ENTERPRISE (PVT) LTD**
288, A9 Road, Karadipokku, Killinochi.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இலங்கையின் வெளிவேசம்

**"இலங்கை, இந்தியாவின் நட்பு தேசம். அத்துடன் நேர்மையான பங்காளி நாடு. அந்த அடிப்படையில் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா உதவும்."**

**– இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார்.**

**கம்போடியாவில் நடைபெறும் ஆசியான் அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் பங்குபற்றச் சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேசினார்.**

**அச்சமயமே இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா உதவும் என்ற தகவலை – உறுதி மொழியை – இந்திய வெளிவிவகார அமைச்சர் வழங்கினார்.**

**இது வெறும் வாய் மொழி மூலமான சொல்லாடல் உறுதி மொழி அல்ல. அதனையும் தாண்டி செயல் மூலமான உறுதிப்பாடும் ஆகும். அந்த உறுதிப்பாட்டை ஏற்கனவே தனது உதவிகள் மூலம் செயலில் செய்து காட்டியும் வருகின்றது இந்தியா.**

**மிக நெருக்கடியான காலகட்டத்தில் இடுக்கண்களையும் தோழமையுடன் இந்தியா விரைந்து உதவி வருகின்றது என்பது வெளிப்படையானது. தொடர்ந்தும் உதவுவதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது என்பதும் நம்பிக்கையானதே.**

**'வெளியுறவுக் கொள்கையில் அயல்தேசத்துக்கு முன்னுரிமை' என்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கைப் பிரகாரம் இந்த உதவிகளை விரைந்து இந்தியா வழங்குகின்றது.**

**அந்தக் கோட்பாட்டின் கீழ் – 'வெளியறவுக் கொள்கையில் அயல்தேசத்துக்கு முன்னுரிமை' என்ற திட்டத்தின் கீழ் – உதவிகளை சுவீகரித்துக் கொள்ளும் இலங்கை, தான் அந்தக் கொள்கைப் படி நடந்து கொள்கின்றதா என்பதுதான் கேள்வி.**

**இலங்கை இந்தியாவின் நட்பு தேசம், அத்துடன் நேர்மையான பங்காளி என்று இந்தியா வெளிவிவகார அமைச்சர் மெச்சுகின்ற விதத்தில் இலங்கை செயற்படுகின்றதா என்பதுதான் வினா.**

**இலங்கையின் செயற்போக்கைச் சகித்துக் கொள்ள முடியாமல் வஞ்சப்புகழ்ச்சி பாணியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இப்படிக் கூறுகின்றாரோ எனச் சந்தேகப்படும் அளவுக்கு மோசமாகத்தான், கொழும்பின் செயற்பாடு – இலங்கையின் வெளிவிவகார நடவடிக்கைகள் – அரங்கேறுகின்றன, அவற்றைச் சகிக்க முடியாமல்தான் இப்படி கிண்டல் பாணியில் 'உண்மையான நண்பன்' என்றும் 'நேர்மையான பங்காளி' என்றும் ஜெய்சங்கர் கூறுகின்றாரோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.**

**அத்துணை கீழ்த்தரமான விதத்தில் உண்மையான நண்பனாகவும் இல்லாமல், நேர்மையான பங்காளியாகவும் இல்லாமல் கொழும்பு பம்மாத்துக் காட்டுகின்றது.**

**அயல்தேசமான இந்தியாவுக்கு பாதுகாப்பு, இராஜதந்திர, அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தும் விதத்தில் சீனா தனது பாதுகாப்பு ஆய்வுக் கப்பலை அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்குக் கொண்டு வந்து, தங்கி ஆய்வுகள் நடத்திச் செல்வதற்கு கொழும்பு அனுமதி அளித்திருக்கின்றது.**

**வெளிவிவகார கையாள்கையில் அயல்தேசமான புதுடில்லியின் கவலைகளை – கரிசனைகளை – சிரத்தைகளை – புறம் ஒதுக்கி நடக்கும் இலங்கை உண்மையில் இந்தியாவின் நேர்மையான பங்காளியும் அல்ல, உண்மையான நட்பு தேசமும் அல்ல.**

## டெங்கு நோயாளர்களில் 25 வீதமானவர்கள் 5 முதல் 19 வயதுக்கிடைப்பட்ட மாணவர்கள்!



நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக பாரியளவில் அதிகரித்துள்ளது.

20–45 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 55 வீதமானவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் பதிவாகியுள்ள 4 லட்சத்து 76 ஆயிரத்து 677 டெங்கு நோயாளர்களில் 25 வீதமானவர்கள் 5 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த மாதத்தின் முதல் மூன்று நாள்களில், 806 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள 67 சுகாதார பிரிவுகள் அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளள எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தற்போது நிலவும் மழையுடனான வானிலை காரணமாக இந்த வலயலங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக் கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களான அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் வளாகங்கள், பாடசாலை சூழல்கள், புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும் பகுதிகள் போன்றவற்றை உடனடியாகச் சுத்தப்படுத்தாவிட்டால், அபாயகரமான நிலைமை உருவாகும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## நாயை அடித்துக்கொன்ற சம்பவம் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது!

யாழ்ப்பாணத்தில் நாய் ஒன்றை மிக கொடூரமான முறையில் படுகொலை செய்து அதனை காணொலி எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட குற்றத்தில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்களில் இருவர் ஊர்காவற்றுறையில்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு 09 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நாய் ஒன்றின் நாலு கால்களையும் கைக்கோடாரி ஒன்றால் துண்டித்து, நாயின் முகத்தை மரக் கட்டை ஒன்றின் மீது வைத்து கைக்கோடாரியால் கொத்தி முகத்தை சிதைத்து படுகொலை செய்துள்ளனர்.

தமது கொடூரமான செயலை காணொலியாகப் பதிவுசெய்து அதனை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்தும் உள்ளனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் அடிப்படையில் சம்பவத்தை காணொலி எடுத்தவர் அதனை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டவர் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் எனும் குற்றத்தில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் எனவும் , அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு தீயணைப்புப் பிரிவுகளை மேம்படுத்தும் செயற்றிட்ட பயிற்சி!





உள்ளூராட்சி சபைகளின் இயலளவை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் வடமாகாண சபை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம், கொழும்பு மாநகர சபை, யாழ்ப்பாண மாநகர சபை ஆகியவை இணைந்து ஐந்து நாள்கள் செயல்முறை ரீதியான கற்றல் செயல்முறைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனூடாக யாழ்.மாநகர சபையினுடைய தீயணைப்பு பிரிவு, கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவு, வவுனியா நகர சபையின் தீயணைப்பு பிரிவு ஆகியவற்றினுடைய முன்னிலை தீயணைப்பு செயல் வீரர்கள் 25 பேர் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.

இந்தப் பயிற்சி நெறிக்கு ஊடாக தீயணைப்பு செயற்பாடுகளின் முக்கியமான முதலுதவி சார்ந்த செயற்பாடுகள், தீயணைப்பு வீரர்களின் பாதுகாப்பு மற்றும் இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை வினைத்திறனாகக் கையாளுதல் ஆகிய விடயங்கள் முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்பட்டன.

இந்தச் செய்ப்பாடு சி.டி.எல்.ஜி. திட்டத்தின் தீயணைப்பு செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் நடவடிக்கையின் முதற்படியாக முன்னெடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் இந்தச் செயற்பாடுகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் மற்றும் தொடர்ந்து கொழும்பு மாநகர சபையுடன் இணைந்து அதிசிறப்புவாய்ந்த பயிற்சிகளை வழங்குதல், தீயணைப்பு சேவையின் தரத்தை உயர்த்துதல் ஆகியவை திட்டமிடப்படுவதுடன், மாநகர சபையின் தீயணைப்பு பிரிவில் நிரந்தர பயிற்சிக் கூடம் ஒன்றை நிறுவுவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் எஸ்.ரி.ஆர்.ஐ.டி.ஈ. நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குகின்றது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=





# தமிழக அரசின் மூன்றாம்கட்ட நிவாரணப் பொருள்கள் முல்லைத்தீவு மாவட்டத்தை நேற்று வந்தடைந்தன

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தமிழக அரசால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட மூன்றாம் கட்ட நிவாரண பொருள்களில் ஒரு லட்சம் கிலோகிராம் அரிசி மற்றும் 3 ஆயிரத்து 375 கிலோகிராம் பால்மா பொதிகள் என்பன நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) கிடைக்கப் பெற் றுள்ளன.

உணவு ஆணையாளர் திணைக்களம் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்த நிவாரணப் பொருள்களை மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பொறுப்பேற்றுக் கொண்டமையையடுத்து, பிரதேச செயலகங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்படி கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 3,100 குடும்பங்களுக்கு அரிசியும் 1,044 குடும்பங்களுக்கு பால்மாவும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 900 குடும்பங்களுக்கு அரிசியும் 305 குடும்பங்களுக்கு பால்மாவும், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 600 குடும்பங்களுக்கு அரிசியும் 205 குடும்பங்களுக்கு பால்மாவும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 1,600 குடும்பங்களுக்கு அரிசியும் 540 குடும்பங்களுக்கு பால்மாவும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 3,000 குடும்பங்களுக்கு அரிசியும் 1,011 குடும்பங்களுக்கு பால்மாவும், வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 800 குடும்பங்களுக்கு அரிசியும் 270 குடும்பங்களுக்கு பால்மாவும் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உணவுப்பொருள்கள் வந்தடையாததால் ஏனைய ஐந்து பிரதேசங்களுக்கான நிவாரணப் பொருள்கள் பிரதேச செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பிரதேச செயலகங்களுடாக அவை வழங்கி வைக்கப்படும்.

இந்த உதவித் திட்டம் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்துள்ள இலங்கையர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கில் நிவாரண பொருள்களை வழங்குவதற்கு, கடந்த ஏப்ரல் மாதம் சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்வைத்த தீர்மானத்திற்கு பலரும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய, இரு கட்டங்களாக நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், மூன்றாம் கட்ட நிவாரண பொருள்கள் முல்லைத்தீவை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைதியாக ஒன்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஆசியானின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டின்போது அமெரிக்க இராஜாங்க செயலாளர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தார். அலி சப்ரியின் சமீபத்தைய நியமனத்திற்கு இராஜாங்க செயலாளர் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இலங்கை மக்களிற்கான அமெரிக்காவின் ஆதரவை அவர் மீள வலியுறுத்தினார்.

இலங்கையின் மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்களிற்கும் சவாலன தருணத்தில் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குமான அமெரிக்காவின் 179 மில்லியன் டொலர் உதவியை அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையை பொருளாதார ஸ்திரதன்மையின் பாதையில் மீண்டும் கொண்டுசெல்வதற்கு சர்வதேச நாணயநிதியத்துடன் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

இலங்கை நெருங்கும் இந்தத் தருணத்தில் நாட்டின் அரசமைப்பின் நடைமுறைகளின் அடிப்படையில் செயற்படவேண்டியதன் அவசியத்தையும். அமைதியாக ஒன்றுகூடுவதற்கானஉரிமைஉட்படஅனைத்துஇலங்கையர்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவேண்டியதன் அவசி யத்தையும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் வலியுறுத்தினார்.

## ஞானசாரர் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சித் தலைவருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற எதிரணிகளின் கூட்டு செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், அதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“ஜனாதிபதியுடன் ஒரு பேச்சு நடத்துவதற்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், தொழில்சங்கவாதி ஜோசப் ஸ்டாலினும், தெற்கிலே ஜனநாயகத்துக்காக போராடிக் கொண்டிருக்கின்ற கைதிகளும் விடுவிக்கப்படாமல் நாங்கள் இந்த அரசாங்கத்தையோ ஜனாதிபதியோ சந்திக்க போவதில்லை” – எனவும. அவர் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்குகின்ற ஓர் ஆட்சியே இன்று நடைபெறுகின்றது. மக்களால் முற்று முழுதாக நிராகரிக்கப்பட்டு, தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ஒருவர் – நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி – ஆட்சியைக் கைப்பற்றி இருக்கின்றார். இது முழுமையாக மக்களை உதாசீனம் செய்கின்ற வகையில் நடத்தப்படுகின்றது.

இராணுவப் பலத்தைப் பயன்படுத்தி, பாஸிசத்தை வெளிப்படுத்துகின்ற வகையிலே ஆட்சியை ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்கின்றார். எம்மை பொறுத்தவரையில் நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுவதற்கு முடிவெடுத்து இருக்கின்றோம்.

எதிர்வரும் பத்தாம் திகதி ஜனாதிபதியுடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எம்மை அழைத்திருந்த நிலையிலே, ஜோசப் ஸ்டாலினும் தெற்கிலே ஜனநாய கத்துக்காக போராடிக் கொண்டிருக்கின்ற கைதிகளும் விடுவிக்கப்படாமல் நாங்கள் இந்த அரசாங்கத்தையோ ஜனாதிபதியோ சந்திக்கப் போவதில்லை. அவர்கள் விடுவிக்கப்படும்வரை அனைத்து போராட்டங்களுக்கும் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம். – என்றார்.

## பொருளாதார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவசியத்தைத் திசை திருப்பும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட தவறானதும் சட்டவிரோதமானதுமான முயற்சியாகவே தென்படுவதாகத் தெரிவித்திருக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நிர்வாகத்துடனேயே ஒன்றிணைந்து பணியாற்ற முடியும் என்பதில் இலங்கையின் சர்வதேசப் பங்காளிகள் மிகத்தெளிவாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசியல் மறுசீரமைப்பையும் நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி தொடர்பில் பொறுப்புக் கூறலையும் கோருகின்ற செயற்பாட்டாளர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கும் அவர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பதற்கும் இலங்கை அரசாங்கம் அவசரகால வழிகாட்டல்களைப் பயன்படுத்தி வருகின்றது.

அமைதிப் போராட்டக்காரர்கள் மீது இலங்கை அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறையானது, தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தைத் திசை திருப்பும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட தவறானதும் சட்டவிரோதமானதுமான முயற்சியாகவே தென்படுகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நிர்வாகத்துடனேயே ஒன்றிணைந்து பணியாற்ற முடியும் என்பதில் இலங்கையின் சர்வதேசப்பங்காளிகள்மிகத்தெளிவாகஇருக்கவேண்டியது அவசியமாகும்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பிரகாரம் அவசரகாலநிலைப் பிரகடனம் அமுலில் இருந்தாலும் கூட சித்திரவதைகளிலிருந்தும் மிகையான படையினரைப் பிரயோகிப்பதிலிருந்தும் பாதுகாப்புப் பெறல் உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் மீறப்படமுடியாதவை.

எனவே சர்வதேச நியமங்களுக்கு முரணானதாக இருக்கக்கூடிய அவசரகாலநிலைப் பிரகடனத்தின் கீழான வழிகாட்டல்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

அதேபோன்று மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு அவசியமான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் சட்டவிரோத மீறல்கள் மற்றும் வன்முறைகளுக்குக் காரணமானவர்களைப் பொறுப்புக்கூறச் செய்வதன் ஊடாக சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும். – என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

## கடல் வழியே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இழுவை படகு மூலம் சட்டவிரோத குடியேற்றவாசிகள் குழு கடல் பயணத்தை ஆரம்பித்த நிலையில் ஜூலை 21 திகதி ஆஸ்திரேலியாவின் கடல் எல்லை வழியாக ஆஸ்திரேலியாவிற்கு இடம்பெயர முயற்சித்த போது, அந்நாட்டு எல்லைப் படையினர் அந்த இயந்திரப் படகை கைப்பற்றி சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது படகில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகள் 46 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வாழைச்சேனை, மட்டக்களப்பு, பாசிக்குடா, அம்பாறை, பிபில மற்றும் மூதூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த 17 முதல் 49 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களே இப்போது அழைத்து வரப்பட்டுள் ளனர்.

ஆஸ்திரேலிய எல்லைப் படைக் கப்பலில் இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்கள் குழுவொன்று நாட்டிற்கு மீண்டும் அழைத்து வரப்பட்ட முதல் சந்தர்ப்பமும் இதுவாகும் என ஆஸ்திரேலிய எல்லைப் படையின் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் கமாண்டர் கிறிஸ் வாட்டர்ஸ் தெரிவித்தார்

இவ்வாறு அழைத்துவரப்பட்டவர்களை ஆஸ்திரேலிய எல்லைப் படை, இலங்கை கடற்படையின் மேற்கு கடற்படை தளபதி ரியர் அட்மிரல் தம்மிக்க குமார ஊடாக கொழும்பு துறைமுகத்தில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைத்துள்ளனர்.

## வடக்கில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்று நாள்களே பாடசாலைகள் நடைபெறும் என அறிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சுப் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார்.

தாம் முன்னாள் நீதிபதி என்பதால் அமைச்சர் பதவிகளை பெற்றுக் கொள்வதில் தனக்கு விசேட அக்கறை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் தாம் யோசனையைச் சமர்ப்பித்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைக்கு ஜனாதிபதியின் பதிலைக் கருத்தில் கொண்டு சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதைத் தமது கட்சி தீர்மானிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இன்றும் நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று ஒரு மணித்தியால காலத்திற்கு அதனை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் அருந்தவபாலன் அவர்கள், மு. முதலமைச்சர் புதிய அரசில் பதவியேதும் ஏற்றால் 'விக்கி கோ கொழும்பு' (Vikke Go Colombo) எனப் போராட்டம் நடத்துவாராமே?

**பதில்:-** ஊடகங்களுக்கு அவர் அளித்த பேட்டியைப் பார்த்தபோது சிரிப்புத்தான் வந்தது. முதலில் விக்னேஸ்வரன் நிச்சயமாக அரசில் பதவியேற்க மாட்டார் என நம்புகிறோம் என்றார். பிறகு, அவர் அரசில் இணைவாரா இல்லையா என்பதை உறுதியாகக் கூறமுடியாத நிலையிலும் நாம் இருக்கிறோம் என்றார். இந்த இரண்டு கூற்றுகளுக்கும் இடையில் இருக்கின்ற முரண்பாட்டை அறியாமலே பேசினார். பிறகு கட்சியின் உறுப்பினர்களுடன் கதைத்தோ, அல்லது கூட்டுக்கட்சியின் தலைவர்களுடன் கலந்தோ, மு.முதலமைச்சர் இப்போது முடிவுகளை எடுப்பதில்லை என்று தன் வருத்தத்தைப் பதிவு செய்தார். இவர்களையெல்லாம் மீறி ரணிலின் அரசாங்கத்தில் அவர் இணைந்தால், நிச்சயமாக 'விக்கி கோ கொழும்பு' (Vikke Go Colombo) என்று சொல்கின்ற முதல் ஆளாக நான் தான் இருப்பேன் என உணர்ச்சிவசப் பட்டார்.

பாவம் தமிழரசுக்கட்சியிலிருந்து விலகி, இந்த மனிதரை நம்பி வந்ததற்கான பலனை இப்பொழுதுதான் அருந்தவபாலன் அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார். மு.முதலமைச்சர் மீது இதே குற்றச்சாட்டைச் சிலநாள்களின் முன்பும் இவர் தெரிவித்திருந்தார். இவரது கருத்தை





ஒரு பொருட்டாகவே மு.முதலமைச்சர் மதிக்கவில்லை. தன்னை அரசியலுக்கு அழைத்து வந்தவர்களை பதவி கிடைத்த ஓர் ஆண்டிலேயே தூக்கி எறிந்தவர் அம் மனிதர். அத்தகையவருக்கு இவர்களெல்லாம் ஒரு பொருட்டா என்ன? மத்திய அரசில் பதவி கிடைத்தால் இவர்களைத் தூக்கி எறிய அவருக்கு எவ்வளவு நேரமாகப் போகிறது? அவசர முடிவால் ஏமாளியாகி நிற்கும் அருந்தவபாலனையும் அவரைச் சார்ந்தோர்களையும் பார்த்துப் பரிதாபப்படுவதைத் தவிர வேறு என்னதான் செய்யமுடியும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதைதான்.**

**2. கேள்வி:-** கூட்டமைப்பினர் புதிய அரசில் இணையப் போகிறார்களா?

**பதில்:-** புத்திசாலிகளாய் இருந்தால் இணைவார்கள்.

தமிழ் மக்களுக்கு இரண்டுவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, நமக்கு உரிமையுள்ள வாழ்விடத்திற்கான நிலையான சுயநிர்ணய உரிமை கொண்ட தன்னாட்சியைப் பெறுதல். அடுத்தது அதைப் பெறும் வரைக்குமான மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சமாளித்தல்.

இதுவரை, கண்ணுக்கு எட்டாத்தூரத்தில் இருக்கின்ற முதல் பிரச்சினையைப் பற்றித்தான் நம் தமிழ்த்தலைவர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதில் அவர்களுக்கு ஓர் வசதியும் இருக்கிறது. பதவிச் சுகத்தை அனுபவித்துக் கொண்டு, வெறுமனே வாய்ப்பேச்சால், நம் இன உரிமைக்காகப் போராடுவதாய்க் காட்டி, மக்களை ஏமாற்ற இம்முதல் பிரச்சினை அவர்களுக்கு வாய்ப்பாய்த் தெரிகிறது.

அதனால் நிதர்சனமான மேற்சொன்ன இரண்டாவது பிரச்சினையைத் தொட அவர்கள் தயங்கி வருகிறார்கள். இப் பிரச்சினையைத் தொட்டால், தம் நிர்வாக ஆற்றல் வெளிப்பட்டுவிடும் என்ற பயம் அவர்களுக்கு. சும்மா இருந்து சுகம் காண முடியாது. இக்காரணங்களால் தான் அப் பிரச்சினைக்குள் கைவைக்க இவர்கள் தயங்கி நிற்கிறார்கள். அரசாங்கம் தரும் பணத்தை ஏதோ தம் சொந்தப்பணம்போல்க் காட்டிப் பகிர்ந்தளித்துவிட்டு, (அதுவும் முழுமையாக நடக்கிறதா?) பலகாலமாய்ப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறார்கள். பேரின அரசுகளுடன் தாம் இணையாமல் இருந்து தூய்மை பேணுவதாய்ப் பொய்முகம் காட்டி மக்களை ஏமாற்றி வரும் இத்தலைவர்களின் செயலில் உண்மை இல்லை.

இரண்டாவதான நிகழ்காலப் பிரச்சினைதான் இன்று தமிழர் தலையில் ஏறியிருக்கும் பெரிய பாரம். அதைப் பற்றி நம் தலைவர்கள் கவலைப்படுவதேயில்லை. இவர்களின் இச்செயலால்த்தான் நிகழ்காலப் பிரச்சினையைத் தீர்ப்பதாய்ச் சொல்லி, தேசியக்கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகளாய் வருவோர் பின்னால் மக்கள் போக வேண்டியிருக்கிறது. கூட்டமைப்பினர் புத்திசாலிகளாக இருந்தால் இவ்விரு பிரச்சினைகளையும் ஒருமித்துக் கையாள வேண்டும். அரசுக்குள் ஒன்றுபட்டு இருந்து கொண்டு நிகழ்காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு அரசோடு மோதி நின்று வருங்காலப் பிரச்சினையையும் தீர்க்கவேண்டும். முன்பும் இத்தகைய ஒரு சந்தர்ப்பம் வந்தபோது அதனைக் கைநழுவ விட்டார்கள். இனியும் அப்படிச் செய்தால் வருங்காலம் இவர்களை இகழும் என்பதில் ஐயமில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கூட்டமைப்பு ரயிலை இரண்டு தண்டவாளத்தில் ஓடச் சொல்லுகிறார் வாரிதியார்.**

**3. கேள்வி:-** சுனாமியின் இரண்டாவது அலை 9 ஆம் திகதி பாயப் போவதாக முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா சொல்லியிருக்கிறார். அந்த இரண்டாவது அலையைப் புதிய அரசு தாங்குமா?

**பதில்:-** வந்தால் தாங்குமா? என்பது வேறு விடயம். முதலில் வருமா? என்று பார்ப்போம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஏற்கனவே வந்த அலைகளை விழுங்கிவிட்டு நிற்கும் ரணில் அகத்தியரிடம் இவரது வேலை செல்லுமா?**

**4. கேள்வி:-** சீனாவின் புலனாய்வுக் கப்பல் ஒன்று நம் கடல் பிரதேசத்திற்குள் நுழையப் போகிறதாமே?

**பதில்:-** அந்நாட்டின் புலனாய்வு அணி இரகசியமாய் இங்கு எப்போதோ நுழைந்திருக்கும். இப்போது தம் ஆதிக்கத்தைக் காட்டத்தான் பகிரங்கமாய்க் கப்பலை அனுப்புகிறார்கள்.

வறுமையால் ஓடேந்தி நிற்கும் நம் அரசின் பாடு பெரும்பாடாகத்தான் இருக்கப்போகிறது. அருகிலிருக்கும் பெரிய நாடுகளிடமிருந்து வரும் உதவிகள் எல்லாம் நம்மை நோக்கி வீசப்படும் தூண்டில்கள்தான். இலங்கையின் தற்போதைய நிலைமையைப் புரிந்து கொண்டு கடன் என்னும் புழுவைக் கோர்த்து, நம் நாட்டின் மீது தம் ஆதிக்கத் தூண்டிலை எறிந்து கொண்டிருக்கின்றன அயல்நாடுகள். நல்லதென்று நினைந்து எதைக் கழித்தாலும் எம் நாட்டிற்குப் பிரச்சினைதான். குறிப்பாகச் சொல்லப் போனால் இக்கப்பலின் வருகை இலங்கைக்கான பிரச்சினை என்பதைவிட இந்தியாவிற்கான பிரச்சினை என்பதுதான் உண்மைநிலை. இந்தியா இப் பிரச்சினையை எப்படிக் கையாளப் போகிறது என்பதை இருந்துதான் பார்க்கவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அயல் பகை ஆயுள் பகை.**

**5. கேள்வி:-** ரணிலுக்கு எதிராக ஏறி நின்ற கூட்டமைப்பு (முக்கியமாக சுமந்திரன் குழு) திடீரென இறங்கி வருமாப்போல் தெரிகிறதே!

**பதில்:-** புத்திசாலிகளாகிவிட்டார்கள் என்று அதற்கு அர்த்தம். நிர்வாகத்தை நடத்துகிற ஒரு அரசன் மூன்று விடயத்தைக் கணித்துச் செயற்படுவது அவசியம் என்கிறார் வள்ளுவர். வலியறிதல், காலமறிதல், இடமறிதல் என்பவையே அம் மூன்று விடயங்களாகும். தேவையில்லாத பிடிவாதங்களுக்காக இம் மூன்றையும் சரியாகக் கணிக்கத் தவறுகிற ஓர் அரசியல்வாதி பெருந்தோல்வி அடைவான் என்பதில் ஐயமில்லை. நாம் விரும்புகிறோமோ இல்லையோ, அடுத்த இரண்டரை ஆண்டுகள் இந்நாட்டின் ஆட்சி ரணிலின் கையில்த்தான் இருக்கப்போகிறது. அவரை வீணாகப் பகைத்து நமக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. பதவியேற்றபிறகு ரணிலின் அறிக்கைகளும் செயற்பாடுகளும் தரும் 'சிக்னல்கள்' நன்றாகத்தான் இருக்கின்றன. இந்நிலையில் பழையவற்றை மறந்து இறங்கி வருவது புத்திசாலித்தனமான செயல் என்றே நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஏறுபவன் இறங்குவதும் இறங்குபவன் ஏறுவதும் அரசியலில் ச. க. ஜ. மப்பா! ஹி.. ஹி..ஹி..**

**6. கேள்வி:-** தமிழ்நாட்டிற்குள்ளே மெல்ல மெல்ல நிகழும் மோடியின் நகர்வு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** அந் நகர்வு மகிழ்ச்சி தருகிறது. இதுவரை தமிழ்நாட்டில் அசையாமல் நின்ற பா.ஜ.க. என்னும் கப்பலை அண்ணாமலை என்கின்ற சிறந்த 'கப்டன்' வேகம் பிடிக்க வைத்திருக்கிறார். இந்நிலையில் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்யும் மோடியின் தந்திரமும் தமிழில் வணக்கம், திருக்குறள் மேற்கோள் என அவர் அடித்துத்தள்ளும் உத்திகளும் தமிழ்நாட்டு மக்களைக் கொஞ்சம் அசைத்து விட்டதாகவே தோன்றுகிறது. பா.ஜ.க. கட்சிக்கூட்டங்களுக்கு வரும் மக்கள் தொகை இவ் உண்மையை உணரச் செய்கிறது. உடனடியாகத் தமிழ் நாட்டில் ஆட்சியைப் பிடிக்கும் அளவிற்கு அவர்கள் வளரவில்லை என்பது என்னவோ உண்மைதான். ஆனால் இதே போக்கில் போனால் அந்த இடத்தை விரைவில் அவர்கள் தொட்டு விடுவார்கள் போல்த்தான் தெரிகிறது. கடவுள் கொள்கையை மறுத்து நின்றவர்கள் (நிற்பவர்கள்) தம் நிலைத்தலுக்காக கடவுளை வேண்டும் காலம் வந்துவிட்டது என்றே தோன்றுகிறது. அது தான் என்னுடைய மகிழ்ச்சியின் காரணம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * பா.ஜ.க - பாரினை ஜயிக்கும் கட்சியோ?**

**7. கேள்வி:-** அண்மைக்காலமாக சைவசமயத்தைச் சார்ந்த ஒருசிலர் இந்துமதத்திற்குள் இருக்கும் மாற்றுச் சமயங்களை வன்மையாகக் கண்டித்தும் விமர்சித்தும் வருகிறார்கள். இந்த மோதல்கள் அவசியம் தானா?

**பதில்:-** என் தாய் அழகு என்று சொல்லுகிற உரிமை எல்லோருக்கும் இருக்கிறது. மற்றவரின் தாய் அழகில்லை என்று சொல்லும் உரிமை எவருக்கும் இல்லை. இன்றைய நிலையில் நம் சைவசமயத்தைச் சார்ந்த இளையோர் சமய நெறிகளைப் பின்பற்றுதில் மிகவும் பின்னிற்கிறார்கள். இந்நேரத்தில் நமக்குள்ளேயே நாம் மோதுவதும், தேவையில்லாத பிரிவுகளை உண்டாக்குவதும் வருத்தமான விடயங்களேயாம். நம் சைவசமயத்தை உறுதிசெய்யும் வேலையில்த்தான் இன்று நாம் இறங்கவேண்டும். அதை விட்டுவிட்டுத் தத்துவநூல்களை அனுபவத்தால் அன்றி, அறிவால் அலசி ஆராய்ந்து, வித்தகம் பண்ண நினைக்கிறார்கள் சிலபேர். அவர்களுக்குச் சைவசமயத்தைக் காப்பதல்ல நோக்கம் தம்மை வெளிக்காட்டுவதுதான் நோக்கம்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட எரிபொருள் வழங்கத் திட்டம்

## மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவிப்பு

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் வைத்து டொலர்களில் கொள்வனவு செய்யக்கூடிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்துள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தலைமையில் நடைபெற்ற தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமை தொடர்பான இணையவழி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் வைத்து டொலர்களில் கொள்வனவு செய்யக்கூடிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, வாகனம் அல்லாத எரிபொருள் தேவைகளுக்கு கியு.ஆர். குறியீடுகளை வழங்குவதற்கான பதிவுக்கான வசதிகளை வழங்குதல், ஒரு தொலைபேசி எண்ணிலிருந்து வணிக பதிவு எண் மூலம் பல



வாகனங்கள் பதிவு செய்தல், அரச வாகனப் பதிவிற்கான தனிப்பட்ட பதிவு எண்ணைக் கொண்ட அனைத்து வாகனங்களையும் பதிவு செய்ய வசதி செய்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்புகளை தானாகவே புதுப்பிக்கும் வசதிகளை மேம்படுத்துதல், தேவைகளுக்கு ஏற்ப எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கான வசதிகள் மற்றும் சட்டவிரோதமாக கியு.ஆர். குறியீடுகளை தயாரித்து பயன்படுத்தும் நபர்களைக் கையாள்வதிலும் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீரற்ற காலநிலை பாதித்த பகுதிகளில் விமானங்களின் மூலம் மீட்புப் பணிகள்!

## தயார் நிலையில் இலங்கை விமானப்படை

நாட்டில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விமானம் மற்றும் மீட்புப் பணியாளர்களை நிலைநிறுத்துவதற்கு இலங்கை விமானப்படை தயார் நிலையில் உள்ளதாக அறிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் அனர்த்த நிலைமை ஏற்பட்டால் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் பணிப்புரையின் கீழ் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என விமானப்படை தெரிவித்துள்ளது.

ரத்மலானை, கட்டுநாயக்க மற்றும் ஹிங்குராங்கொட ஆகிய விமானப்படை தளங்களில் இருந்து கண்காணிப்பு விமானம், ஹெலிக்கொப்டர்கள் மற்றும் சிறப்புப் பயிற்சி பெற்ற ரெஜிமென்ட் சிறப்புப் படைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணங்களை வழங்குவதற்காகத் தற்போது தயார் நிலையில் உள்ளன.

தென்மேற்கு பருவக்காற்று காரணமாக, மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்புகளிலும், தென்மேற்கு பகுதியிலும் மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ள நிலையில், இலங்கைக்கு கடுமையான காலநிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இந்திய வெளிவிவகார அமைச்சருடன் அமெரிக்க இராஜாங்க செயலர் பேச்சு!

## இலங்கையின் நெருக்கடி தொடர்பாக



இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் இலங்கை நெருக்கடி தொடர்பாக விவாதித்தேன் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

கம்போடிய தலைநகரில் இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்தவேளை உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாகவும் இலங்கையின் அரசியல் பொருளாதார நிலை தொடர்பான பேச்சுக்களையும் மேற்கொண்டேன் என பிளிங்கென் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

# 22 ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இலங்கைக்கு முதல் வெள்ளிப் பதக்கம் கிடைத்தது!





22 ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில், இலங்கையின் வீரரான யுபுன் அபேகோன், வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அவர் தனது தூரத்தை ஓடி 10.14 வினாடிகளில் ஓடி முடித்தார்.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற முதல் இலங்கை வீரர் என்ற சாதனையை யுபுன் அபேகோன் ஏற்படுத்தியுள்ளார்.

இதேவேளை, பேர்மிங்ஹாம் 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான எவ்42 - 44/61 - 64 தட்டெறிதல் பரா போட்டியில் இலங்கையின் பாலித ஹல்கஹவெல கெதர வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

# இடிந்து விழும் கட்டடங்களிலிருந்து மக்களை வெளியேறுமாறு கோரிக்கை

ஹற்றன் நகரின் டிக்கோயா வீதியில் அமைந்துள்ள எம்.ஆர். நகரப் பகுதியில் இடிந்து விழும் கட்டடங்கள் மற் றும் அதனை சூழவுள்ள பகுதிகளை நுவரெலியா மாவட்ட கட்டட ஆய்வு நிறுவன புவியியலாளர்கள் ஆய்வு செய்தனர்.

அதனையடுத்து, சில கட்டடங்களைச் சோதனையிட்ட போது, இதில் சில கட்டடங்கள் இடிந்து விழும் அபாயத்தில் இருக்கின்றமையை அவதானித்தோம் என புவியியலாளர் புத்திக விஜேகோன் தெரிவித்தார்.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள மிகவும் ஆபத்தான நான்கு மாடிக் கட்டடத்தில் வெடிப்புகள் காணப்பட்டன எனவும், இதனால் அங்கிருந்தவர்களை வெளியேறுமாறு தெரிவித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிலைவரப்படி, கட்டடம் உடனடியாக இடிந்து விழாது என்பது ஆய்வு மூலம் உறுதி செய்யப்பட்டதாகவும், கட்டடம் கட்டப் பெறப்பட்ட அனுமதி மற்றும் திட்டம் மற்றும் முறை கோப்புகளைச் சரிபார்த்து, இறுதி முடிவு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், வாகனங்கள் செல்ல முடியாமல் இருந்த அந்தப் பகுதியில் உள்ள காமினிபுர நுழைவு வீதியை திறப்பதன் மூலம் இலகு ரக வாகனங்கள் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபோக செய்கையில் இடம்பெற்ற முறைகேடுகள்; நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அசமந்தமான பதில்

கிளிநொச்சி – இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு முன்னெடுக்கப்பட்டுள்ள சிறுபோக செய்கையில் இடம்பெற்றுள்ள ஊழல் முறைகேடுகளின் பின்னணியில் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதை மூடி மறைக்கும் விதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு பொறுப்பற்ற விதத்தில் பதில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு நூறு விதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக கோரக்கன் கட்டு, பெரியகுளம், முரசுமோட்டை, குமரபுரம் போன்ற பகுதிகள் உள்வாங்கப்பட்டு அவற்றிலும் பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கோரக்கன்கட்டுப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான காணிகளை வழங்குவதாகத் தெரிவித்தாலும், அவ்வாறு வழங்காது நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள் சிலரும், சின்னக்காடு மற்றும் கோரக்கன் கட்டு கமக்கார அமைப்பினரும் சேர்ந்து இறுதிப் பயிர் செய்கை கூட்டத்தீர்மானத்துக்கு மாறாக பணத்தொகைக்கான பொதுப்பங்குகள் விநியோகம், முறையற்ற விதத்திலான பங்குகள் வழங்கல் என பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன எனத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு இணை தலைவர் ஆகியோருக்கான மகஜர்களை கையளித்திருந்தனர்.

இருப்பினும், இதுவரை எந்த விதமான விசாரணைகளோ, தீர்வுகளோ முன்னெடுக்கப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி தகவல்களை பெறும் விதத்தில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் விண்ணப்பித்த போது கோரக்கன் கட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பொறுப்பாக பதிலளிக்க வேண்டிய நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்பற்ற விதத்திலும் அதிகாரிகளைப் பாதுகாக்கும் விதத்திலும் பதில்களை வழங்கியுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

# காலிமுகத்திடலில் உடல்கள் மீட்பு; உடனடி விசாரணைகள் அவசியம்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள்

கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகம் மற்றும் காலிமுகத்திடலில் உடல்கள் மீட்கப்பட்டமை தொடர்பாகப் பொலிஸ்மா அதிபர் உடனடியாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த சில வாரங்களாக நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் காரணமாக பல தனிநபர்கள் கொல்லப்பட்டுள்ளமை தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

கரையோரப்பகுதிகளில் கரையொதுங்கும் உடல்கள் குறிப்பாக காலிமுகத்திடலில் கரையொதுங்கிய உடல்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளியான தகவல்கள் குறித்தும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உடல்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக அதிகாரிகள் எந்தவித விளக்கத்தையும் வெளியிடாதமையால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# நகர அபிவிருத்தி அதிகார சபையினரினால் வடக்கில் விசேட மக்கள் நடமாடும் சேவை!

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் பொதுமக்கள் நடமாடும் சேவை ஒன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பிரதிப் பணிப்பாளர் கவிதா ஜீவகன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக பொதுமக்கள் நடமாடும் சேவை இரண்டு கட்டங்களாக நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடத்த எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நகர விருத்தி அதிகார சபையின் வடமாகாண காரியாலயத்தில் முதலாம் மாடியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக வவுனியா மாவட்டம் மற்றும் முல்லைத்தீவு மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக வவுனியா கலாசார மண்டபத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பொதுமக்கள் நடமாடும் சேவையும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் நகர விருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்த அதாவது நகர அபிவிருத்தி அதிகார சபையால் நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் உள்ள தங்களது திட்டமிடல் அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகள் அதாவது கட்டட கட்டுமானம், காணி தொடர்பான பிரச்சினைகள் அங்கீகாரமற்ற கட்டடங்கள் மேலும் வேறு கட்டட அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் நடமாடும் சேவையில் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

இதில் அபிவிருத்தி திட்டமிடல் அனுமதி தொடர்பாக துறை சார்ந்த திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலோடு இந்த பொதுமக்கள் நடமாடும் சேவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நடமாடும் சேவையில் பயன்பெற விரும்பும் பொது மக்கள் குறித்த நடமாடும் சேவையில் பங்குபற்ற



முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி கிழக்கில் கிணறுகள் கையளிப்பு

சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் 15 ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் கிணறு இல்லாத 7 குடும்பங்களுக்கு கிணறு கட்டி கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு அண்மையில் வ.தவராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தியும் கௌரவ விருந்தினராக மருதங்கேணி வைத்தியசாலை வைத்தியர் பா.தினகரனும் சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்வி பணிப்பாளர் சிறி ராசமசந்திரனும் வைத்தியர் சிவனேசனும் பாடசாலை அதிபர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

சுவிஸ் வடமராட்சி கிழக்கு ஒன்றியத்தின் செயலாளர் க. பாஸ்கரன், உறுப்பினர்களான விஜிதகுமார், குலசேகரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

## முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பொலிஸாரால் மீட்ட எரிபொருள்கள் மீள ஒப்படைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இருந்து பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்ட எரிபொருள்கள் மீளவும் பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தைச் சோதனையிட வேண்டும் என பொலிஸார் அனுமதி கோரியிருந்தமையை பிரதேச செயலாளர் மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் மக்களுக்கு தெளிவுபடுத்தவும் மற்றும் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதற்காகவும் பிரதேச செயலகத்தை சோதனையிடுவதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் அனுமதி வழங்கி இருந்தார்.

பிரதேச செயலகத்தை சோதனையிட்ட பொலிஸார் அத்தியாவசிய தேவைக்கு இருந்த எரிபொருளை எடுத்துச் சென்றனர்.

இதில் புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் கிராமத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கு நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு பயன்படுத்துவதற்காக அலுவலகத்தில் இருந்த 4.5 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அலுவலக மின்பிறப்பாக்கி மற்றும் அலுவலக வாகன பாவனைக்கான 50 லீற்றர் டீசல் என்பன பொலிஸாரால் எடுக்கப்பட்டன.

இதன் பின்னர் பிரதேச செயலாளருக்கு ஒதுக்கப்பட்ட விடுதியில் சோதனை நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர்

இதன்போது விடுதியில் பிரதேச செயலாளரின் அன்றாட சமையல் மற்றும் மின்சார துண்டிப்பு நேரங்களில் விளக்குக்காகப் பயன்படுத்துவதற்காக இருந்த 5 லீற்றர் மண்ணெண்ணெய் மற்றும் பிரதேச செயலாளரின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் என்பதால் வீட்டில் ஏதும் அவசர தேவையிருப்பின் சென்றுவருவதற்காக சாதாரண மக்கள் பெற்றுக் கொள்வது போல் தனது மோட்டார் சைக்கிளுக்கு பயன்படுத்துவதற்கான 10 லீற்றர் பெற்றோலை பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு பொலிஸாரால் மீட்கப்பட்ட எரிபொருளை மீண்டும் பிரதேச செயலகத்திடம் பொலிஸார் கையளித்துள்ளனர்.

## மின்சார அலகுகளின் பாவனை 20 வீதத்தினால் குறைந்தது!

இலங்கையில் மின்சார அலகுகளின் பாவனை 20 வீதத்தால் குறைவடைந்தது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சுமார் 06 மாதங்களுக்கு முன்னர் மின்பாவனையாளர்கள்நாளொன்றுக்கு 48 மில்லியன் அலகுகள் மின்சாரத்தை பயன்படுத்தி வந்த போதிலும், தற்போது 38 மில்லியனாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாதங்களாக நிலவும் மின்வெட்டு மற்றும் நுகர்வோரின் குறைந்தளவான மின்பாவனையே இதற்குக் காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.

## மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கலை துரிதப்படுத்த நடவடிக்கை!

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் மாணவர்களுக்கான கொரோனா தடுப்பு தடுப்பூசிகளை துரிதமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சுகாதாரப் பழக்கவழக்கங்களை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஜனநாயக அரசு உருவாகும் வாய்ப்பை இலங்கை நெருக்கடி ஏற்படுத்தியுள்ளது

கொழும்பு, ஒக. 06

இலங்கை நெருக்கடி அதிகளவு ஜனநாயக அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது சவாலான நெருக்கடியான தருணத்தில் உள்ளது. ஆனால் அந்த நாட்டுக்கு அதிகளவு ஜனநாயக தன்மை மிக்க அனைவரையும் உள்ளடக்கிய அரசாங்கத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புள்ளது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்றியை கம்போடிய தலைநகரில் ஆசிய வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் சந்தித்தவேளை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சர்வதேச நாணயநிதியத்தின் உதவி கிடைப்பதற்கு அமெரிக்கா வழங்கும் உதவியை பாராட்டுவதாக அலி சப்றி தெரிவித்துள்ளார்.

## பாட்டும் நானே? ...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரியம் ஏதும் செய்யாமல் சுகமாகப் புகழடைய சிலபேர் இப்போது ஒரு புது வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்த வழிக்கு ‘நொட்டைவாசிப்பு’ என்று பெயர். தம்பணிகளால் புகழடைந்த மனிதர்களை விமர்சிப்பதன் மூலம் தம்மை அடையாளங்காட்ட முயலும் இவர்கள், தங்களையும் நாவலராய் நினைத்துக் கொள்கிறார்கள். இவ் அறிவீனர்களை நாம் என்ன செய்ய?

ஓர் உண்மைச் சமயம், மற்றச் சமயங்களுடைய இருப்பை என்றைக்கும் மறுப்பதில்லை. இக் கருத்தை மறைந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், உண்மைச் சமயம் எந்தச் சமயத்தையும் தடுத்து நிறுத்துவதில்லை. ஒன்றோடு ஒன்று மாறுபடுகின்ற சமயங்கள் எல்லாம் இருப்பது நீதியே என்பது உண்மைச் சமயத்தின் கொள்கை என நூல் ஒன்றின் முன்னுரையில் தெளிவுற எழுதியிருக்கிறார்.

பலகோடி ஆன்மாக்களின் பக்குவ வித்தியாசத்திற்கேற்ப, வழிபாட்டு முறைகளும் மாறியிருப்பது தவிர்க்க முடியாதது. இறைவனேதான் அந்நிலையை உருவாக்கி வைத்திருக்கிறான் என நாம் அறிதல் வேண்டும். அதுவும் திருவருட் சம்மதமேயாம். திருவருட் சம்மதத்தை மீறி ஒன்று நடக்குமா என்ன?

சைவசித்தாந்தம் தன்னோடு முரண்படுகிற பல கொள்கைகளையும், சமயங்களாய் ஏற்றுக்கொண்டுள்ளது. அகச்சமயம், அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம் என சமயங்களை அது நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறது. அப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஆறாறு சமயங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதில் கடைசியாய்ச் சொல்லப்படும் புறப்புறச் சமயத்தில் ‘உலோகாயுதம்’ எனும் ஒரு சமயத்தையும் சேர்த்துள்ளார்கள். அச் சமயம் என்ன சொல்கிறது என்று அறிந்தால், நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். கடவுள் என்று ஒருவர் இல்லை என்று மறுக்கும் சமயம் அது. சைவசமயம் அதனையும் ஒதுக்கி வைக்காமல், புறப்புறச் சமயமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இது தான் சைவத்தின் தனிச்சிறப்பு. இது தெரியாமல் கொஞ்சப்பேர் சித்தாந்தம் படித்ததாகச் சொல்லி சமயப்பூசல் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முகநூல் என்னும் வசதி வந்தபிறகு யாரும் எதையும் எழுதலாம், எவரும் எவர் மேலும் சேற்றை அள்ளி வீசலாம் என்ற நிலை உருவாகிவிட்டது. இந்தச் சுதந்திரம் கிடைத்ததும், தத்தமக்குத் தெரிந்தவற்றை எல்லாம், உண்மை எது என்று ஆராயாமல், சில ‘கத்துக்குட்டிகள்’ அத்தளங்களைக் குப்பைக் குவியல்களாய் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். கேட்க ஆளில்லா விட்டால் ‘தம்பி சண்டப்பிரசண்டன்’ தான் என்ற கதைதான் நடந்து கொண்டிருக்கிறது.

கோபுரத்தின் மேல் உட்கார்ந்த குருவி ஒன்று, தான் கோபுரத்தைவிட உயர்ந்திருப்பதாய் நினைப்பது போலத்தான், தற்செயலாய் தத்துவக் கோபுரங்களில் உட்கார்ந்த சிலர், தாம் தத்துவச் சிகரத்தில் இருப்பதாய்க் காட்ட முனைந்து பிதற்றித் திரிகிறார்கள். இவர்களால் சைவம் இழுக்குறப்போவது மட்டும் உறுதி.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இதுவும் திருவருட் சம்மதமோ? ஹி..ஹி..**

# இந்திய - அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கை நெருக்கடி நிலை குறித்து ஆராய்வு



இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் இலங்கை நெருக்கடி நிலைமை குறித்துத் தாம் விவாதித்தேன் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

கம்போடிய தலைநகரில் இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தவேளை உக்ரைன் மீதான் ரஷ்யாவின் போரினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், இலங்கையின் அரசியல் பொருளாதார நிலைமை ஆகியன குறித்து பேச்சுகளைத் தான் மேற்கொண்டேன் என பிளிங்கன் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

கம்போடியாவில் இடம்பெறும் ஆசியாவின் வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பிற்கு முன்னதாகவே இருவரும் சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பில் முதலில் கருத்து தெரிவித்த அன்டனி பிளிங்கன் –

இந்தோ பசுபிக்கில் ஆசியாவின் மையத்தன்மைக்கு இந்தியாவும் அமெரிக்காவும் வலுவான ஆதரவாளர்கள் என குறிப்பிட்டார் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாங்கள் ஆசியாவின் மையத்தன்மையின் வலுவான ஆதரவாளர்கள் என தெரிவித்துள்ள பிளிங்கன் சுதந்திரமான இந்தோ பசுபிக் குறித்த நாங்கள் ஒன்றாக பகிரப்பட்ட பார்வையைக் கொண்டுள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாளும் பல்வேறு வழிகளில் நாங்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, மியன்மாரின் தற்போதையய நிலைமை உட்பட சில பகுதிகளில் நாங்கள் உடனடி சவால்களை எதிர்கொண்டுள்ளோம் இது குறித்து கரிசனைகொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

என்னுடைய நண்பருடன் இந்த விவகாரங்கள் குறித்து நான் மீண்டும் ஆராயவுள்ளேன் அதன் பின்னர் நாங்கள் கூட்டத்திற்கு செல்வோம் என பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் விஜயத்திற்கு பின்னர் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்தும் இருவரும் ஆராய்ந்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இதற்கிடையில் –

இந்தியாவின் நம்பகமான நண்பர் மற்றும் நேர்மையான பங்காளி நாடு என்ற அடிப்படையில் இந்தியா, இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்றியிடம் உறுதியளித்துள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கம்போடியாவில் இடம்பெற்று வரும் ஆசியான் மற்றும் இந்திய அமைச்சர் மட்ட மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி அங்கு சென்றுள்ளார். இதன்போது இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜெய்சங்கர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.






# நொண்டுகிறது சீன வீடமைப்புத் துறை!

சீனாவில் தற்போதைய சூழலில் வீடமைப்பு நெருக்கடி மற்றும் பொருளாதார மந்த நிலைக்கு மத்தியில் இரண்டாவது காலாண்டில் நாடு பின்தங்கிய வளர்ச்சி மற்றும் மோசமான செயல்திறனைப் பதிவு செய்வதால் அமெரிக்காவை விட ஒரு அர்த்தமுள்ள பொருளாதார முன்னணியை நிறுவ முடியவில்லை எனத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

2022ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் சீனாவின் வளர்ச்சி விகிதம் 0.4 சதவீதமாகக் குறைந்துள்ளது.

பொருளாதாரத்தின் ரியல் எஸ்டேட் துறையில் சரிவு, குறைந்த உற்பத்திப் பயன்பாடு கொண்ட உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதன் மூலம் வளர்ச்சியைத் தூண்டும் கொள்கை மற்றும் வளங்கள் மூழ்கடிக்கப்பட்டமை, ‘பாதை மற்றும் பட்டி’ (‘பெல்ட் அண்ட் றோட்’) முன்முயற்சி மூலம் வெளிநாடுகளில் மோசமான முதலீடுகள் போன்றவை, சீனாவின் பூச்சிய – கொவிட் கொள்கை வளர்ச்சி விகிதத்தின் சமீபத்திய வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் காரணிகளாக இருக்கலாம், என ‘தி பைனான்சியல் போஸ்ட்’ தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியான கொரோனா வைரஸ் முடக்கங்கள் மற்றும் நிச்சயமற்ற வணிக நிலைமைகளுக்கு மத்தியில் ஏப்ரல் மாதத்தில் சீனாவில் சில்லறை விற்பனை 11 சதவீதம் சரிந்துள்ளது.

கொவிட் –எதிர்ப்பு நடவடிக்கைகள் எந்தக் குறையும் இன்றித் தொடரும் என்று ஜூலை 28 அன்று சீன கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்ததால்வரும்மாதங்களில்சீனப்பொருளாதாரம் புத்துயிர் பெறுவது கடினம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.


கடந்த ஆண்டு 2.5 சதவீதமாக இருந்த வளர்ச்சி இலக்கை இந்த ஆண்டு 5.5 சதவீதமாக எட்டுவது நாடு கடினமாகும் என்றும் அந்த வெளியீடு தெரிவித்துள்ளது.

சீனப் பொருளாதாரம் அனைத்து நாடுகளின் முதன்மை உதயமாக உருவாகும் என்பது வெறும் கற்பனையே என்று நிபுணர்கள் நம்புகின்றனர், ஏனெனில் அந்த நாடு அமெரிக்கப் பொருளாதாரத்தை முந்த முடியாது.

வளர்ச்சி குறைவது, சீனாவால் உண்மையில் அமெரிக்காவை விட அர்த்தமுள்ள பொருளாதார முன்னணியை நிறுவ முடியாது என்பதை தெளிவுபடுத்தும். உலகம் எங்கு செல்கிறது என்பதைப் பற்றிய கருத்துக்களுக்கு இது முக்கியமான தாக்கங்களைக் கொண்டுள்ளது, என்று தலைமை பொருளாதார நிபுணர் ரொனால்ட் ராஜா கூறினார் என லோவி இன்ஸ்டிடியூட் அறிவு மையத்தை மேற்கோள் காட்டி அந்த வெளியீடு கூறியது.

ரியல் எஸ்டேட் துறையின் பல விசித்திரமானகதைகள்சீனாவின்அவநம்பிக்கையான சூழ்நிலையை பிரதிபலிக்கின்றன.

கிழக்கு சீனாவில் உள்ள ஒரு ரியல் எஸ்டேட் டெவலப்பர், வசிக்கும் யுனிட்டுகளை வாங்குபவர்களுக்கு அவற்றுக்குப் பணத்துடன் தர்பூசணிகளிலும் கட்டணத்தைச் செலுத்த அனுமதிப்பது போன்ற ஒரு கதை. அதாவது 5,000 கிலோ பழம் மற்றும் 100,000 யுவான் பணம் சேர்த்துச் செலுத்தலாம் என்ற ஏற்பாடு.




2021ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் சீனாவில் அதிகாரிகள் ஐந்து தொன் வெடிபொருள்களுடன் 15 வானளாவிய கட்டடங்களை இடித்தார்கள் என்று மற்றொரு கதை கூறுகிறது.

2008 இல் நாட்டில் ரியல் எஸ்டேட் வளர்ச்சியடைந்தாலும், 2015 முதல் அது பின்வாங்கத் தொடங்கியது.

நாட்டின் சொத்து சந்தையில் ஆழ்ந்த சரிவு உள்ளது. சீனாவின் நலிந்த சொத்து சந்தை அதன் மிகப்பெரிய பொருளாதார தலைவலிகளில் ஒன்றாகும்.

ஜூன் 2021 நிலைவரப்படி, ‘சைனா எவர் கிராண்டே குழுமம்’ 300 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான கடன் மற்றும் விநியோகஸ்தர்களுக்குச் செலுத்தப்படாத பில்கள் போன்ற பிற பொறுப்புகளைக் கொண்டுள்ளது.

குறிப்பிடத்தக்க வகையில், ஏராளமான சீன குடிமக்கள் தங்களுடைய தங்குமிட அலகுகளை சரியான நேரத்தில் கையகப்படுத்தாததால் அடமான ஒழுங்குகளைப் புறக்கணிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

பணவசதி இல்லாத பில்டர்கள் திட்டங்களை முடிக்க முடியாத நிலையில் உள்ளனர். வீடு வாங்குபவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதும், தங்களுடைய வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்று நம்பாததும்தான் வீட்டு நெருக்கடிக்கு முக்கியக் காரணம்.

சீனப் பொருளாதாரத்தின் இன்றியமையாத துறையாக வீடமைப்புத் துறை உள்ளது, ஏனெனில் புதிய வீடு வாங்குதல்கள் சீனாவின் சொத்துத் துறையில் 80 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளன.

புவிசார் மூலோபாய அனுகூலத்தைப் பெறுவதற்காக நாடு வணிகத் திட்டங்களில் முதலீடு செய்தாலும், பெறுநர் நாடுகள் இப்போது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் – சீன நிறுவனங்களின் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் – உள்ளனர் என்று அக்கட்டுரை விவரிக்கிறது.

(மூலம்:ஏ.என்.ஐ.)

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-84

**தமிழ் மக்கள் கற்றுக் கொள்ளாத, கற்றுக்கொள்ள விரும்பாத பாடங்கள்**

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.' – என்றார் வள்ளுவர்.

படிக்காமல், அறிவில்லாதவனாக இருந்து விடாதே, அதற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு திரியாமல் எதையும் படி என்றார். ஆனால் படிப்பவற்றை ஐயம் திரிபில்லாமல் முழுமையாகப் படி என்றும் அடுத்த பதத்தில் சொன்னார். அவற்றைக் கசடற கற்றபின் தான், எவற்றைப் படிக்க வேண்டுமோ அவற்றைப் படி, அந்தப் படிப்புகளின் பின் அவை சொல்லிய வழிகளிலே வாழ்க்கையை அமைத்துக் கொள் என்றார்.



அன்ரன் பாலசிங்கம்

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் எல்லோருமே நுனிப் புல் மேய்ந்தார்கள் என்பதுதான் பலரது அபிப்பிராயம். படிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் வந்த போதெல்லாம் அவற்றை கசடற கற்காது, பின் கற்க வேண்டியவற்றைப் படிக்காது, தலைவர்களாகிவிட வேண்டும் என்ற திட்டங்கள், தன்னலங்களில் செயற்பட்டார்களே ஒழிய, தமிழினம் சார்ந்து, அதனது நலத்திற்கான பொதுநோக்கைக் கடைபிடிக்கவில்லை. அது இன்றுவரைத் தொடர்கிறது.

ஒற்றுமை என்பது தமிழ் மக்கள் கற்றுக் கொள்ள விரும்பாத பாடம். அதனை 'கற்பவையாக' படிக்க வேண்டும் என்று தெரியும். இந்த ஒற்றுமையீனத்தால்தான் எதிரிகள் எங்களை விரட்டுகிறார்கள் என்று தெரிந்தும், அவர்கள் அதைக் கற்பதற்கு விரும்பாமல், பிரிந்தே நின்று கெட்டித்தனங்களையும் செயல்திறன்களையும் பேசுவார்கள்.

இவற்றைப் பற்றி பல பேர் காலங்காலமாக எழுதாமல் இல்லை. ஆனாலும், மீண்டும் அதனை இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வித்தியாதரன் ஓகஸ்ட் 4, 2022 இதழின் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:–

"அங்கு தேசிய ரீதியில் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடி என்றால் இங்கு தமிழர் தாயகத்தில் தமிழரின் தேசிய இருப்புக்கே நெருக்கடி.

"முழு நாட்டின் நெருக்கடியை எதிர்கொள்ள முழு நாடாக இலங்கை தீவு ஒன்றுபடத் தயாராகிறது. அதன் போக்கை நாம் இப்போது பார்க்கிறோம்.

"ஆனால் அதேபோன்ற சிக்கலுக்குள் மாட்டியிருக்கும் தமிழ்த் தேசியத்தை மீட்டெடுக்கத் தமிழ்த் தேசிய சக்திகள் ஒன்றுபடவில்லை. மாறாக, மேலும் மேலும் பிளவுகளைக் கூட்டித் தமிழர் தேசத்தை சின்னாபின்னமாக்குவதையே தலையாய கடமையாகக் கங்கணம் கட்டி ஆற்றுகின்றன. இது தமிழர் தேசத்தின் தலைவிதி.

"தெற்குக்குப் புரிந்தது வடக்குக் கிழக்குக்குப் புரியவில்லை. வேற்றுமையிலும் ஒற்றுமை காணத் தெரியவில்லை" – என்று அந்த ஆசிரியர் தலையங்கம் தெரிவிக்கிறது.

இந்திய உளவுத்துறையின் மூத்த அதிகாரி சந்திரசேகரனுக்கும் பாலசிங்கம் மற்றும் பிரபாகரன் போன்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் இடையே பரிமாறப்பட்ட கருத்துக்களின் நோக்கங்களில், இந்திய அரசியல் தலைவர்கள் – இந்திரா காந்தி கூட – தமிழ் மக்களின் மேல் அனுதாபமும் ஆதரவும், ஜே.ஆருக்கு எதிரான போக்கும் கொண்டிருந்தாலும், விடுதலைப் புலிகள் விரும்புவது போல தனிநாடு ஒன்றை அமைக்க முன் வர மாட்டார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. அதனை விளங்கிக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாமல், தாங்கள் அந்த நீரோட்டத்தில் இருந்துவிலகிவிடவோ, தவிர்க்கப்படவோ கூடாது என்ற எண்ணத்திலேயே பயிற்சிகளை பெற ஒழுங்குகள் செய்து, அதையும் மற்றவர்களோடு இணையாமல் தனித்தவில்கள் வாசித்து கச்சேரிகள் நடத்தவே புறப்பட்டனர்.

ஆயினும் இந்தியா தன் பாதையிலும் நோக்கங்களிலும் தெளிவாகவே இருந்தது. அதனைத் திரும்பவும் எல்லாத் தரப்புகளுக்கும் திம்புவில் கூடிய போதும் வெளிப்படுத்தியது. ஆனால் பிரச்சினைகள் எமது தலைவர்களிடையேதான் இருந்தன. அவற்றைப் படித்தோ விளங்கிக் கொள்ளவோ அவர்களுக்கு விருப்பம் இருக்கவில்லை. புவியியல் நகர்வுகளை அனுசரிக்கவும் அதனை ஒட்டிக் கற்றுக் கொண்ட அறிவில் தீர்மானங்கள் எடுக்கவும் அவர்கள் விரும்பவில்லை.

குழுக்கள் ஒவ்வொன்றும் றோவினூடாக ஆயுதப் பயிற்சி பெற்றிருந்தாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தான் அரசியல் தலைவர்களாக கணித்து இந்திய அரசு பேச்சுக்கு அழைத்து அவர்களுடன் பேச்சு நடத்தியது. மற்றக் குழுக்கள் யாவையும் பக்கபலத்துக்குத்தான் – ஜே.ஆர். தரப்புக்கு பீதியை வளர்க்கும் நிலை பற்றி அறிவூட்டுவதற்குத்தான் என்றமைந்தன.

விடுதலைக் குழுக்கள் பயங்கரவாதிகள் என்பதனால் அவர்களுடன் மேசையில் பேச்சுக்கு அமர மாட்டேன் என்று விடாப்பிடியாக நின்றார் ஜே.ஆர்.

ஆனால் அவை எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா விடுதலை குழுக்களும் – பயிற்சிக்கு தனியாவர்த்தனங்களாகப் போனவர்கள் கூட – தங்களைத்தான் அரசியல் பிரதிநிதிகளாக கருத வேண்டும், அமிர்தலிங்கத்தையோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியையோ அல்ல என்ற நிலைப்பாட்டில் இருந்தார்கள்.

பின்னர் இவை, தமிழர் விடுதலைக் கூட்டணியும் எல்லா விடுதலைக் குழுக்களும் பங்கு பற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தித்தால் பேச்சுவார்த்தைகள் முன்னேறித் தமிழ் தரப்புகள் எல்லோரும் இணைந்து 'திம்பு தீர்மானத்தை' முன்வைத்தன.

எவ்வளவுதான் விடுதலை குழுக்களுடன் தங்களது அரசியல் ஆதாயங்களுக்காக சர்வதேச அரசுகள் தொடர்பு வைத்துக்கொண்டாலும், அவர்கள் ராஜதந்திரங்கள் கருதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளுடனேயே பேச்சுக்கள் நடத்துவது வழமை. இந்தியா தனி நாடு என ஒன்று அந்தப் பிரதேசத்தில் அமைவதை ஏற்றுக் கொள்ளாது என்ற செய்தி சொல்லப்பட்டும், அது அறியப்பட்டும், தொடர்ந்த நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையே பிளவுகளை உருவாக்குவனவாகவும் தலைமைத்துவத்துக்கான போட்டிகளாகவும் அமைந்தன.

### இந்திய ஒப்பந்த காலப் பேச்சுக்கள்

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் சரத்துக்கள், நோக்கங்கள் என்பன பற்றி இந்த 35 ஆண்டுகளில் ஒவ்வொரு பகுதியினரும் தங்களது நிலைகளை ஆதாரப்படுத்தி ஆயிரக்கணக்கான கட்டுரைகளும் நூல்களும் எழுதி விட்டனர். அவற்றின் நியாயங்களை ஆராய்வது இந்தப் பதிவின் நோக்கம் அல்ல, ஆனால் நடந்தவற்றிலிருந்து கற்றுக் கொண்டார்களா, அன்றில் தமிழ் மக்கள் ஒற்றுமையாகத் தமிழர் நலன் சார்ந்து தீர்மானங்களை எடுத்தார்களா என்ற கேள்விக்கு விடை தேட சில சம்பவங்களை பார்க்க வேண்டியுள்ளது.



திம்புப் பேச்சு

பாலசிங்கம் தனது 'போரும் சமாதானமும்' என்ற நூலில் சந்திரசேகரின் சந்திப்பைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர் "இந்திரா காந்தி கூட ஸ்ரீலங்கா என்ற ஒரு நாட்டுக்குள் ஏற்படுத்தக்கூடிய தீர்வு, அதனது இறைமையை மீறாதவாறு இருக்க வேண்டும் என்றே தீர்மானித்திருந்தார், ஒட்டுமொத்தத் திட்டங்களைப் புரிந்து கொள்ளாத தமிழ் நாட்டினதும் தமிழ் மக்களினதும் சில தலைவர்கள் இந்திரா காந்தி இராணுவ ஊடுருவல் பாதையை முன்னெடுக்கிறார் என்ற கானல் தோற்றத்தை வளர்த்தார்கள், ஆனால் பிரபாகரனுக்கு உண்மை புரிந்திருந்தது, அதே சமயம் இந்தியா ஈடுபட்டது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைத்த மன உறுதியும் தென்பும். மேலும் அது அவர்களது போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தியது" – எனக் கூறுகிறார்.



தலைவர் பிரபா

அது மாத்திரமல்ல இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னர் ராஜீவ் காந்தி பதவியேற்ற பின், அரசாங்கத்தில் ஏற்படும் பிராந்திய ரீதியான கொள்கை மாற்றங்களையும், அதில் இந்தியா தன்னைச் சுற்றியுள்ள அண்டை நாடுகளோடு பேச்சுகளால் இணக்கம் காணவே விழையும் என்பதை அரசியல் மட்டத்தில் இருந்தவர்களும், உளவுத்துறை அதிகாரிகளும் தெரியப்படுத்தியவற்றையும் பதிவிடுகிறார் பாலசிங்கம்.

இந்திரா காந்தியின் நம்பிக்கைக்குரிய வெளிவிவகாரச் செயலாளர் பார்த்தசாரதியை சந்தித்தபோது, அவர் மேலும் தனது ஈடுபாடுகள் கோரப்படாது எனத் தெரிவித்து, புதிய நடைமுறைகள் புதிய வெளிவிவகாரச் செயலாளர் ரமேஷ் பண்டாரியின் அணுகுமுறையில் அமையும், அதில் பயிற்சி தரப்பட்ட ஆயுத குழுக்களுக்கு மேலும் பயிற்சி தருவது நிறுத்தப்பட்டு அவர்களுக்கு மோதல்களுக்கு போக வேண்டாம் என அறிவுறுத்தல்களும் வரலாம், தானும் இந்திரா காந்தியும் ஜே.ஆரின் நரித்தனத்தை உணர்ந்த அளவு ராஜீவ் காந்தி உணர்ந்தவராகத் தெரியவில்லை, ஆகவே எல்லாத் தமிழ்த் தரப்புக்களும் இணைந்து, ஒற்றுமையைக் கடைப்பிடித்து, பொதுத் தீர்மானங்களில் ஜே.ஆருடனான பேச்சுக்களுக்கு போவதற்கு தயாராக வேண்டும். – எனத் தெளிவுபடுத்தினார்.

மற்ற சந்திப்புகளை பற்றிய விவரங்களை அடுத்துப் பார்க்கலாம்.

(வளரும்)